Registered No. M. 1014.

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் சமுகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபேறநில்.

வெண்டாமரை கு.	1913-ம் ஆ மார்ச்சு மீ	இதழ் ஈ.

பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்

கல்லீவ காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புதுவை.

வருஷ சந்தா ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
தபாற் கூலி அணா 4	தனி சஞ்சிகை அணா 2

Sinnaya Press, Pondicherry

உள்ளுறை.

பக்கம்.

பத்திரிகையின் பயன் : — பத்திராதிபர் 1

சுபோத ரத்நாகரம் (எங்குஞ் செல்லுமோர் தங்க நாணயம்) ஸ்ரீமத் செங்கல்வராய முதலியார், காஞ்சிபுரம். 4

பால சிக்ஷை :— ஸ்ரீமதி க. பு. அம்மணியம்மாள் B. I., புதுவை. 6

அன்பு :— ஸ்ரீமத் தி. வடிவேலு முதலியார், காரியதரிசி, கம்பர்கலாமிர்த சங்கம், திருவெண்ணெய்நல்லூர். ... 11

ஓர் நீதிவாக்கியம் :— ஸ்ரீமத் N. சொக்கலிங்க செட்டியார், பங்கிப்பேட்டை. 14

மணிமேகலை : — பத்திராதிபர். 16

மங்கலம் : — வேதாந்தபாஸ்கர் கோயிலூர் ஸ்ரீமத் வீர - சுப்பைய சுவாமிகள். 20

நியாயமாலா : — ஸ்ரீமத் வா. மாசிலாமணி முதலியார், பென்ஷன் சப் இஞ்சினீர், காஞ்சிபுரம் 21

மதீஷா பஞ்சகம் : — பத்திராதிபர். 22

இந்தியாவின் தத்துவஞானம்.

பிரம்மஸ்ரீ ஜீ. ஸி. ஷட்டர்ஜீ அவர்களால் ப்ருப்க்ளின் நகரத்தில் 1898-ம் ஆண்டில் பிராஞ்சுப்பாஷையில் உபந்யஸிக்கப் பட்டது. புதுவை பிரமக்ஞான சபை அங்கத்தினரும் பொதுமேலோர்களுள் ஒவர்சியருமாகிய வே. கு. அநந்தநாயக நாயகரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

டபிள் க்ரவன் சயிஸில் (1 இ 16) 12½ பாரம் (200 பக்கம்) கொண்ட புத்தகம் 1 இ விலை அணா 6. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், "ஸ்ரீக்ருஷ்ண" வாசகசாலை
சிகாளத்தீசர் கோயில் வீதி,
புதுச்சேரி.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

க லி ம க ள் .

புதுவைக் கலிமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விழயல். வீடுபேறநில்.

வெண்டாமரை க.] 1913-ம் ஆ மார்ச்சு மீ [இதழ் ங.

இலௌகிகப் பகுதி.

பத்திரிகையின் பயன்.

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா ரென்னுடைய ரோனுமிலர்" என்பது தெய்வப் புலவர் திருவாக்கு. அறிவுடையார் பிறிதொன்றுமிலராயினும் எல்லாச் செல்வங்களையுமுடையராவர்; அறிவில்லாதார் எல்லாச் செல்வங்களையுமுடையராயினும் ஒன்றுமிலராவர் என்பது இச்செய்யுளின் தேர்ந்த பொருள்.

செல்வங்களெல்லாம் அறிவாற் படைக்கவுங் காக்கவும் படுதலின், அறிவுடையவரே எல்லாமுடையராதற் குரியராதலானும், செல்வங்களெல்லாம் முன்னே யமைந்து கிடப்பினும் அவற்றை யழியாமற் காத்தற்கும், ஊழ்வகையால் அழிந்த விடத்துப் படைப்பதற்கும் அறிவாகிய கருவியின்மையின் அவ்வறிவில்லாதவரே ஒன்றுமிலராதற்குரியராதலானும் இங்ஙனங் கூறினரென்க.

இதனுல் எல்லாச் செல்வங்களையும் அடைவதற்கு அறிவே காரணமென்பது இனிது பெறப்படும். ஆகவே மனித சமூகத்திற் பிறந்த ஒவ்வொருவரும் அறிவைப் பெறவேண்டுவது

ஆவசிகமன்றே? இத்தகைய அறிவை எளிதிற் பயக்குஞ் சாதனம் எதுவென்பதை ஈண்டு விசாரிக்கப்புகுதும்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

(திருக்குறள்)

மணலின்கட் கேணி தோண்டிய அளவிற்றாக நீர்சுரக்கும்; அது போல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக வூறும்.

"செவியுணர்விற் கேள்வி யுடையா ரவியுணவி
னொன்றோ டொப்பர் நிலத்து"

(ஷை)

செவியுணவாகிய கேள்வியினையுடையார் நிலத்தின்கண்ணராயினும் அவியுணவினையுடைய தேவரோடொப்பர்.

இன்னோரன்ன கட்டுரைகளால் கல்வி கேள்விகளே அறிவைக் கவினுற வளர்க்குங் கருவியென்பது வெள்ளிடை மலை போல் விளங்குகின்றது.

இக்கல்வி கேள்விகளைப்பற்றி விசாரிக்கப்புகின், "கல்வி கரையில கற்பவர் நாள்சில மெல்ல நினைக்கிற் பிணிபல" என்ற படி கல்வியோ கடலினும் பெரிது; நமதாயுளோ மிகச் சிறிது; இடையிலெய்தும் பிணிகளோ எண்ணிறந்தன. ஆகவே "முற்று முணர்ந்தவரில்லை" என்னு முதுமொழிக்கிணங்க முற்றும் பயின்றுணர்தல் கூடாமையென்பதும், கேள்வியால் எல்லாப் பொருள்களையும் அறிதல் கூடுமென்பதும் ஆன்றோர் துணிபு. ஆனது பற்றியே "செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ் செல்வத்து ளெல்லாந் தலை" என்றார் செந்நாப்போதார். எனவே, கல்விச் செல்வத்தைவிடக் கேள்விச் செல்வத்தையே பெரிதுந் தேடவேண்டுமென்பது ஆவசிகமென அறியக்கிடந்தது.

ஆனல் கேள்விச் செல்வமானது கல்வி, கேள்வி, அறிவு ஒழுக்கங்களால் நிறைந்த பெரியோர்கள் வாயினின்றும் வரற்பால தாதலானும், அன்னோர் பல்வேறிடங்களிற் பயின்றுறைகுவாதலானும், எஞ்ஞான்றும் ஒருவரையொருவர் சந்தித்தல் இயலா

— 3 —

தாதலானும், அப்போதறிவாளர்களால் ஜீவனுபகாரமாக விஷயங்க ளெழுதப்பட்டு வெளியுலவுகின்ற பத்திரிகைகளேவிடக் கேள்விச் செல்வத்தை ஒருங்கே பயக்கத்தக்க இன்றியமையாத கருவி வேறொன்றில்லையென்று துணிந்துரைக்கப்படும். ஆதலின், செவிச் செல்வத்தின் வழியாய் அறிவை விளக்கும் பத்திரிகைகளே மனித ராகப் பிறந்த ஒவ்வொருவரும் வாங்கிப் படித்தல்வேண்டும்.

பத்திரிகையின் பயன்கள் அளப்பில என்பதை அறியா தார் சிலரே. எந்த நாட்டில் பத்திரிகைகள் தலையெடுத் துலவு கின்றனவோ அந்த நாட்டின் சரித்திரங்களென்று அவைகளைச் சொல்லலாம். ஏனெனின், பொதுப்பொது குடிகளின் விருப்பைத் தெரிப்பதும், உற்ற குறைகளைத் தெற்றென வுரைப்பதும், அர சாட்சியின் ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக் கூறுவதும், பலகலை சான்ற புலவர்களியற்றிய அரியபன்னூல்களைத் தெரிய வுணர்த்து வதும் பத்திரிகைகளே யாதலின்.

மேலும், பல்லாயிரம் மைலுக்கப்பாலுள்ள தேசங்களில் நடக்கும் விஷயங்களை நடந்த சில தினங்கட்குள் நடந்தவண்ணம் நமக்குத் தெரிவிப்பது பத்திரிகையன்றே? உலக நடவடிக்கை களை யுணரச்செய்து உலக அறிவை யிலக வளர்ப்பது பத்திரிகை யன்றே? அரிய பெரிய நூல்களுள் மறைந்து கிடக்கும் அரிய விஷயங்களை எடுத்துக்காட்டி இன்புறச் செய்வதும் பத்திரிகையே யன்றே? நுண்ணறிவுடையாரானும் ஆழ்ந்த யோசனையுள்ளவ ரானும் விஷயங்கள் எழுதப்படும் பத்திரிகைகள், ஜனங்களின் போதகர்கள் என்பதற்கு யாது தடை? ஒவ்வொரு தேசமுஞ் சீர்திருத்தமடைந்து, முன்னில்லாத நாகரிகம்பெற்று, நன்மை யுற்றதும் உறுவதும் பத்திரிகையினுலெனின், அதன் சிறப்பை நானெடுத்து நவிலுவதெங்ஙன்?

இங்ஙனம் பன்முகத்தானும் மக்கட்கு அறிவை வளர்த்து ஒழுக்கத்தை யுண்டாக்கி அளவற்ற நன்மைகளை விளைவிக்கின்ற பத்திரிகைகள் எங்குப் பல்குகின்றனவோ அத்தேசம் பலவிதத் தானுஞ் சிறப்புறுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. பத்திரிகைக்

கூட்டம் பரவிக்கிடக்கும் ஐரோப்பா முதலிய மேலைத் தேசங்களே அதற்குப் போதிய சான்று.

மற்றத் தேயங்களில் விட நம் தேயத்தில் பத்திரிகைகள் எவ்வளவோ குறைவென்பதை எவரு மறிவர். அதிலுந் தேச பாஷைப் பத்திரிகைகளோ மிகவுங் குறைவு. பொது ஜனங்க ளுடைய ஆதரவின்மையால் நம் தேயத்திற் பல பத்திரிகைகள் தோன்றித் தோன்றி மறைந்துபோவதை நாம் கண்கூடாகக் காணு கின்றோம். மற்றத் தேசங்களில் பத்திரிகைகள் பெருமையுறு தற்கு அத்தேசத்தின் ஆதரவும், நம் தேசத்திற் பத்திரிகைகள் சிறுமையுறுவதற்கு நம் தேசத்தின் அநாதரவுமே காரணமென்க. மற்ற விஷயங்களில் எவ்வளவோ பெருந் தொகை செலவுசெய் யும் நமது ஜனங்கள், தேச நன்மையைக் கோரிய பத்திரிகை விஷயத்தில் ஒரு சிறு தொகை செலவுசெய்யப் பின்வாங்குவது எவ்வளவு விசனிக்கத்தகுந்த காரியம்!

மேலைத் தேசங்களிற் போலக் கூலிக்கு வேலைசெய்யும் ஏழை மாந்தரும் பத்திரிகை வாங்கிப் படிக்க ஆர்வமுடையராகுங் காலம் எதுவோ அதுவே நமது தேயம் முன்னுக்கு வருங்காலம். அந்நாள் எந்நாளோ! ஈசன் திருவருள்புரிக.

பத்திராதிபர்.

சுபோத ரத்நாகரம்.

எந்தந் தெல்லுமோர் தங்க நாணயம்.

உலகத்தில் நாம் இன்பத்தையடைதற்கு உபகருவிகளா யுள்ள பொருள்களைப் பெறப் பலவகையான நாணயங்களை யுபயோகிக்கின் றோம். அவை செம்பு, வெள்ளி, தங்கம், பத்திரம் முதலியவையாம். செம்பு நாணயம் பைசாவென்றும், வெள்ளி நாணயம் ரூபா யென்றும், தங்க நாணயம் பவுன் என்றும், பத்திர நாணயம் நோட்டு என்றும் வழங்கப்பட்டு வருவது பிரசித்தம். இவையும் சிற்சில தேசங்களில் வேறு வேறு குறியிடு கொடுக்கப்பட்டு வழங்கி வருதலுங் கண்கூடே.

— 5 —

நாம் ஒரு சுக சாதனப் பொருளைப்பெற ஆயிரம் பவுன் வேண்டிய திருக்குமானால், அவ்வளவிற்கு நம்மிடமுள்ள நாணயங்களை அப்பொருள் கிடைக்கு மிடங் கொண்டுசெல்லச் சுமை முதலிய எவ்வாற்றாலாவது கூடாதபோதும், அல்லது நம்மிடமுள்ள நாணயங்கள் அங்குச் செல்லாத போதும் நாமடைந்துள்ள நாணயங்களை யொருவரிடங் கொடுத்து நோட் டுகளாகவோ அல்லது அங்குச் செல்லத்தக்க நாணய வகைகளாகவோ மாற்றிக்கொண்டு செல்கின்றோம். இது யாவர்க்குந் தெரிந்த விஷயமே.

அங்ஙனமாக, மறுமையில் நாம் பெறற்குரிய சுக சாதனப் பொரு ளைப் பெறுதற்குரிய நாணயத்தை இம்மையில் நாம் பெற்றுள்ள நாண யங்களைக் கொடுத்து மாற்றிப் பெற்றுக்கொள்ளுதற்கு ஏதேனு சாமதித் தல் வேண்டும். இம்மையில் நாம் பெற்றுள்ள நாணய வகைகளொன் றும் மறுமைக்கண் சுவர்க்காதிகளில் செலாவணியாகாதே. அன்றியும் இந்நாணயங்களை அங்குக் கொண்டுசெல்லவும் நம்மால் இயலாதே.

ஆனால் மறுமைக்கண் செலாவணியாகத்தக்கதும் உடன்கொண்டு செல்லுதற்குரியதுமான நாணயம் யாது? அது எங்குக் கிடைக்கும்? எங்ஙனம் பெறலாம்? எனின், அத்தகைய நாணயம் அறமேயாகும். அது இப்பூவுலகின்கண்ணேயே கிடைக்கும். அதைப் பெறும் உபாயம் தக் காரைக் கீதலேயாம்.

ஆகலின் அன்பர்களே, கவனியுங்கள் கவனியுங்கள். ஒரு மனி தன் இராஜாக்கினையால் பலாத்காரமாகத் தேசாந்தரம் போகவேண்டிய திருக்குமாயின், அம்மனிதன் தான் போய்ச் சேரவேண்டிய தேசத்தில் செலாவணியாகத்தக்கதும் உடன்கொண்டுபோதற்குத் தக்கதுமான நா ணய வகைகளாகத் தன்னிடமுள்ள நாணயங்களை முன்னதாகவே பரி வர்த்தனை செய்துகொள்ளானாயின், தான் செல்லும் தேசத்தில் எங்ங னஞ் சுகம்பெறமாட்டாமல் துன்புற்றுக் கலங்குவானே, அதுபோல நாம் ஈஸ்வராஜ்ஞைப்படி சுயேச்சையின்றி இத்தூல தேகத்தை விட்டுப் போங் காலத்து, மறுமைக்கண் செலாவணியாகத்தக்கதும் உடன்கொண்டு போகத்தக்கதுமான "அறம்" என்னும் நாணயமாக நம்மிடமுள்ள பொ ருள்களைக் கொடுத்து மாற்றி வைத்துக்கொண்டிராவிடின், மறுமை இன்பத்தைப் பெறமாட்டாது துன்புற்றுக் கலங்க நேரிடும்.

அன்றியும், அரசனுணையால் நாம் தேசாந்தரஞ் செல்லுங்காலம் நம்மால் முன் அறியப்படுவதுபோல, நாம் இத்தூல உடம்பினை விட்டுப் போங்கால மிதென நாம் அறியமாட்டோமே. அறிந்தாரும் காலந் தாழ்க்

காது அறத்தை விரைந்து தேடுகின்றார்களெனின், அறியாத நாம் அறத்தைத் தேடத் தாமதித்த லழகேயோ?

ஆதலின் நாம் செல்லவேண்டியவிடத்தில் செல்லக்கூடிய நாணயத்தை நாம் தேடிக்கொண்டிருக்கையில், அந்நாணயத்தினை வலுவில் கொண்டுவந்து கொடுப்பவரை எங்ஙனம் முகமலர்ச்சியோடு வரவழைத்துபசரித்து நம் நாணயங்களை அவரிடங் கொடுத்து நமக்கு வேண்டிய நாணய வகையைப் பெற்றுக்கொள்வோமோ, அதுபோல நாம் மறுமைக்குபயோகமாகப் பெறவேண்டிய அறம் என்னும் நாணயத்தை நம்பால் அளிக்க வலுவில் வரும் இரப்பாரை முகமலர்ச்சியோடு வரவழைத்துபசரித்து, அத்தக்கார்பால் நம் கைப்பொருளைக் கொடுத்து, அறம் அறம் என்னும் எங்குஞ் செல்லு மோர் தங்க நாணயத்தைப் பெற்று இருமையினும் இன்புறுவோமாக. சுபம்.

ஆ. செங்கல்வராய முதலியார்

காஞ்சிபுரம்.

பால சிகை.

(தொடர்ச்சி)

சுவது அத்தியாயம்.

முதல் வயது.

இவ்வயதில் அநுசரிக்கவேண்டிய
சுகாதார முறைகளும், ஆயுர்வேத விதிகளும்.

உலகத்தில் பிறக்கும் பிள்ளைகளில் நூற்றுக்கு முப்பதுக்கு அதிகமாக, சிசுப்பிராயத்திலேயே இறந்துவிடுகின்றனவென்றும், முக்கியமாய் ஒரு வயதாகிறதற்குள்ளேயே இவ்வகால மரணம் அதிகமாய்ச் சம்பவிக்கிறதென்றும் ஆயுள்வேதபண்டிதர் கூறுகின்றனர்.

மற்றத்தேசங்களினும் நமது இந்தியாவில் சிசுப்பிராயத்தில் இறந்துவிடும் குழந்தைகளின் தொகை பயங்கரத்துக்குரியவிதமாய் அபரிமிதமாயிருக்கிறது. இத்தேசத்தில் பிறக்கிற பிள்ளைகளில் இரண்டிலொன்று ஐந்து வயதாவதற்குமுன் மரித்துவிடுகிறதென்று இராஜாங்கத்தார் கணக்கெடுத்திருக்கின்றனர். இதற்குக் காரணம், தம் குழவிகள் மாட்டு இந்தி

— 7 —

யத் தாயர்கட்கு அன்பும் பராமரிப்பும் குறைவுபடுதலன்று. இந்தியத் தாயர்களின் புத்திரவாஞ்சை உலகப் பிரசித்திபெற்றுள்ளது. எனினும், நோய் வராம லிருப்பதற்காக முன் ஜாக்கிரதையா யனுசரிக்க வேண்டிய சுகாதார முறைகளை யறிந்து அவைகளைப் பின்பற்றுமையே சிறு குழந்தைகள் நமது தேயத்தில் அபரிமிதமாய் மடிவதற்கு முக்கிய காரணம்.

பரீஸ்பட்டணத்து வைத்திய மகாசங்கத்தின் அங்கத்தினராகிய டாக்டர் பிளர் துரை, மற்றும் பிரசித்திபெற்ற ப்ராஞ்சு ஆங்கிலேய ஆயுர் வேதசாஸ்திரிகள் இவர்களுடைய சிசு வைத்திய நூற்களை ஆதாரவாகக் கொண்டு, தாய்மார்கள் குழந்தைகள்மாட்டு அநுசரிக்கவேண்டிய முக்கிய முறைகள் சிலவற்றை ஈங்குக் கூறுவாம்.

ஸ்நானம்.

குழந்தைகளின் தேகாரோக்கியத்திற்கு ஸ்நானம் அத்தியாவசிகம். நோயற்றுச் சுகமாயிருக்கும் பிள்ளையைத் தினந்தோறும் ஸ்நானஞ் செய்விக்கவேண்டும். காலைநேரமே ஸ்நானத்துக்கு நல்ல சமயம். ஆகாரம் உட்கொண்டு பிள்ளையின் வயிறு நிரம்பி யிருக்கும்போது, ஒருபோதும் ஸ்நானஞ் செய்விக்கலாகாது. குளிக்கும் ஜலம் சுத்தமா யிருக்கவேண்டும். குளிர்ந்த ஜலமும், அதிக உஷ்ணமான ஜலமும் பிள்ளைகள் குளிப்பதற்குத் தக்கதன்று. தாய் தன் கையை வைத்தால் தனக்கு இதமாயிருக்கும் பதத்திலுள்ள வெந்நீரையே குழந்தைகளைக் குளிப்பிக்க உபயோகப்படுத்தவேண்டும். பதமான வெந்நீரில் குளிக்கும் குழந்தை அழாது. ஓர்வித சுகத்தை யனுபவிப்பதுபோல உல்லாசமாக இருக்கும். சிறு குழந்தைகளை அதிகநேரம் ஜலத்தில் வைத்திருக்கலாகாது. சுண்ணம் அதிகம் கலவாத சவுக்காரம் அல்லது வாசனைப்பொடி முதலியவற்றால் உடல்முழுவதும் மெல்லெனத் தேய்த்து இரண்டொருதரம் சுத்த ஜலம்விட்டு அலம்பியபின்னர் உடனே உலர்ந்த துணியால் பிள்ளையை நன்றாகச் சுற்றிக் காற்றுபடாமல் ஓர் அறையில் எடுத்துப்போய், துணியினால் மிருதுவாகத் தேய்த்துத் துடைத்து ஈரம்போக்கி, குளிராணுகாமலிருக்க அரைச்சட்டை முதலிய யாதாமொரு வஸ்திரத்தினால் உடம்பை மூடிவைக்கவேண்டும். ஸ்நானத்துக்குப் பிறகு அஜாக்கிரதையினால் சீதளம் அணுகவிடுவதினாலேயே குழந்தைகள் பலவித கபரோகங்களுக்கு இரையாகின்றன. உஷ்ண ஜலத்திலிருந்த குழந்தையைக் குளிர்ந்த காற்றில் திடீரென மாற்றிவைத்தலே வியாதியும் மரணமும் உண்டாதற்கு முக்கிய காரணம்.

குளிர் கிறு குழந்தைகட்குப் பாம சத்துரு என்ற ஆயுர்வேத உண்மையைத் தாய்மார்கள் எஞ்ஞான்றும் தங்கள் ஞாபகத்தில்வைத்திருத்தல் வேண்டும்.

ஆகாரம்.

குழந்தைக்குத் தன் தாய்ப்பாலே குற்றமற்ற ஆகாரம். தாயின் அன்பும் பாலும் ஈடற்றவைகளென்பது எவராலும் அறிந்துகிடக்கும் உண்மை.

பெற்றவளே குழந்தைக்குத் தன் பாலூட்டி வளர்ப்பது, குழந்தைகளின் சுக வளர்ச்சிக்கும் தேக புஷ்டிக்கு மாத்திரமன்று, தாயின் தேகாரோக்கியத்திற்கும் இன்றியமையாதது. பால் கொடுத்தால் தன் உடற்குக் கெடுதி வருமென்று எண்ணித் தன் கடமையை யியற்றாத தாய் புத்திரகாதகத்தைக் கட்டிக்கொள்வதுடன் தன் உடற்கும் பழிகாரியாகின்றாள். ஏனென்னில், பாலுள்ளவள் அதைக்கொடாமல் நிறுத்திவிடுவதினால் பல ரோகங்கட்கு இரையாகின்றாள். நோயற்ற ஒவ்வொரு தாயும் தன் குழந்தைக்குத் தன் பாலையே ஊட்டி வளர்ப்பது அவள் முக்கிய கடமை.

நினைத்த நேரமெல்லாம் குழந்தைகட்குப் பால்கொடுக்கக் கூடாது. இராப்பகல் அறுபது நாழிகையில் அதாவது இருபத்துநாலுமணி நேரத்தில் ஆறுமுதல் எட்டுவிசைக் கதிகமாய்க் குழந்தைக்குப் பாலூட்டக் கூடாதென்பது ஆயுர்வேத கற்பனை. பகலில் இரண்டு மூன்று மணிக்கொருதரமும், இரவில் ஆறு எழு மணிக்கொருதரமும் பால் கொடுக்க வேண்டும். தூங்கும் பிள்ளைக்கு நித்திரைபங்கஞ் செய்து பால்கொடுப்பது தவறு. விழிக்கும்வரையில் காத்திருக்கவேண்டும்.

சாதாரணமாய்ப் பிறந்த முதலிரண்டு நாட்களில் குழந்தை இருபது சிறுகரண்டிக்கு அதிக பால் குடிக்காது. பின் இரண்டு நாட்களில் கால் சேர் பாலும், ஐந்தாவது நாள் முதல் ஒருமாதம் வரையில் அரைச் சேர் பாலும், பிறகு ஒருவயதுவரையில் ஒரு சேர் பாலும் இருபத்துநாலு மணிநேரத்தில் அருந்துமெனச் சிசு வைத்திய போதகர் கணக்கெடுத்திருக்கின்றனர்.

குழந்தைக்குப் பலமும் சுகமும் அதிகப்படுமென மீணெண்ணங் கொண்டு அளவுக்குமிஞ்சி ஆகாரங்கொடுக்க முயல்வது தவறு. அந்தோ! தாயர்களின் இத்தகைய குருட்டுத் தனத்தால் மடிந்த குழந்தைகளின் தொகை எத்தனையோ கோடி. கொடுக்கும் ஆகாரத்தினாலன்று, ஜீரணிக்கு மாகாரத்தினாலேயே பலமும் சுகமும் உண்டாகு மென்கிற உறுதியைத்

தாயர்கள் எஞ்ஞான்றும் தமது நெஞ்சிற் பதித்து வைத்துக்கொள்ள வேண்டும். அளவுக்குமிஞ்சிய ஆகாரத்தினுல் அஜீரணமும் அதனுற் பல நோய்களும் ஏற்படும். குழந்தை அழும்போதெல்லாம் பால்கொடுத்துச் சாந்தப்படுத்த முயல்வது சுத்த பிசகு. இத் துரப்பியாசத்தால் குழந்தைக்கு அஜீரணமும் அமைதிக் குறைவும் தாய்க்கு வீண் சிரமமுமே யுண்டாகும்.

பால் கொடுக்குந் தாய் கடுங்கோபம், விசனம் முதலியவைகட்கு மனந் லிடங்கொடாது, எப்போதும் ஆத்ம சரீர சுத்தியுள்ளவளா யிருக்க வேண்டும். அவள் புசிக்கும் ஆகாரம் குற்றமற்றதாகவும் போதுமான தாகவும் இருக்கவேண்டும். சாராய முதலிய லாகிரிவஸ்துக்களே ஒரு போதும் உபயோகிக்கக்கூடாது.

யாதாமொரு காரணத்தால் தாய்ப்பால் குடிக்கும் பாக்கியத்தை யிழந்த குழவிகட்குப் பசுவின்பாலே உத்தம ஆகாரம்.

கழுதைப்பால் இனிப்பிலும் மற்ற அம்சங்களிலும் முலைப்பாலுக் கொத்ததாயினும் அப்பால் போதியவரையில் கிடைப்பதரிது. வெள்ளாட்டின் பால் சுலபத்தில் கிடைக்கக்கூடியதாயினும் முலைப்பாலைப்போல் இனிமையும் மற்றக் குணங்களும் உடையதல்ல. அதிக கொழுமையுள்ளது. கஷ்டமாக ஜீரணிக்கப்படுவது.

கண்ணுடி சோக்களிலும் சகர 'டப்பிகளிலும் குழந்தைகட்குரிய ஆகாரமென்றும், தாய்ப்பாலிலுஞ் சிறந்ததென்றும் வியாபாரமுறையிற் பெரிதும் புகழப்பட்டு மேல்நாட்டினின்றும் வந்து விற்கப்படுகின்றவைகளில் ஒன்றும் நமது தேயத்துப் பிள்ளைகட்குத் தக்கதன்று. குற்றமற்ற பசுவின்பால் கிடைக்கக்கூடியதா யிருக்கும்போது அதைவிட்டு வேறு ஆகாரவஸ்துக்களைக் குழந்தைகட்குத் தேடுதல், வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கலைவதை யொக்கும். பசுவின் பாலை உபயோகிக்கும்போது பின்வரும் விதிகளை யநுசரிக்கவேண்டும்.

பசு நோயற்றதா யிருக்கவேண்டும். அதைச் சுத்தமாக வைத்துக் குற்றமற்ற தீனிகொடுத்துப் போஷித்து வரவேண்டும். பால் அப்போதைக்கப்போது கறந்ததாக இருத்தல் நன்று. புளிப்பேறின பழம்பால் குழந்தைகட்கு விஷம்போன்றது. குழந்தைகட்குக் கொடுக்கும் பசுவின் பாலை ஒரு கொதிவரும்வரையில் காய்ச்சவேண்டும். கொடுக்கும்போது தாய்ப்பாலவ்வளவு சூடுள்ளபதத்தில் கொடுக்கவேண்டும்.

பசுவின்பால் சிறு குழவிகட்கு அதிக புஷ்டியும் கொழுமையு முள்ளதாகையால் அதில் நன்றாகக் கொதித்த ஜலம் சேர்த்தே கொடுக்க

வேண்டும். ஒரு மாதம் வரையில் சரிபாதி ஜலமும், பின் மாதங்களில் வரவர ஜலம் குறைவாகவும் பால் அதிகமாகவுஞ் சேர்த்துக் கொடுக்க வேண்டும். ஜீரண சக்தி அதிகமில்லாத குழந்தைகட்கு முதல் மாதங்களில் பாலைக் காய்ச்சும்போது மேல் படர்ந்து நிற்கும் பாலேட்டை நீக்கி விட்டு மற்றதை மேற்கூறியவிதங் கொடுத்துவருதல் நலம்.

பசுவின்பாலில் கொஞ்சம் சர்க்கரை சேர்த்துக்கொடுக்கலாம்.

சில சமயங்களில் பசுவின் பாலில் புளிப்பேறிக் கட்டிக்கட்டியாய்க் குழந்தை வாந்திசெய்வதுமுண்டு. அதைத் தடுப்பதற்குப் பாலில் சில துளி சுண்ண நீர் (lime water) சேர்த்துக் கொடுப்பது மிகவும் நன்று.

குழந்தைகட்குக் கொடுக்கும் பாலைக் காய்ச்சிய பிறகு அதி சாக்கிரதையாக மூடிவைக்கவேண்டும். ஏனெனில், ஆகாயத்தில் கண்ணிற்குப் புலப்படாத அநேக விஷக்கிருமிகள் பரவியிருக்கின்றன. அவைகள் பாலுடன் சேர்ந்ததும் செழித்து வளர்ந்து சிசுக்களின் வயிற்றிற்சென்று பல நோய்களுக்குக் காரணமாகின்றன. அன்றியும் பிள்ளைகட்குப் பால் புகட்டும் சங்கு கரண்டி முதலியவைகளை உபயோகிக்கும் ஒவ்வொரு தரமுங் கொதிக்கும் ஜலத்தில் இரண்டொரு நிமிஷம் போட்டு எடுக்க வேண்டும்.

தாயின் பால் போதாதபோது மேற்கூறிய முறைகளுடன் பசுவின் பாலைச் சேர்த்து வரலாம். நல்ல ஜீர்ண சக்தியுடன் வளருங் குழந்தைக்குச் சிக்கலின்றி மல விசர்ச்சனமாகும். நீர் தாராளமாகப் பிரியும். நோயற்ற குழந்தைகட்கு முதல் மாதத்தில் இரண்டு முதல் ஆறுதரமும், இரண்டா மாத முதல் ஆறுமாதம் வரையில் இரண்டு முதல் நாலுதரமும், ஆறுமாத முதல் ஒருவயது வரையில் இரண்டொருதரமுந் தினந் தினம் மலப்பிரவர்த்தியாகவேண்டும். இந்தக் கணக்கிற்கு அதிக ஏற்றக்குறைவாக இருத்தல் வியாதியின் தப்பாத அறிகுறியென்றுணர்ந்து ஆகார விஷயத்தில் கவனித்து, வேண்டுமானால் வைத்தியரைக்கொண்டு ஔஷதப் பிரயோகமுஞ் செய்விக்கத் தாமதிக்கக்கூடாது. இன்னும் மலத்தின் நிறமே ஜீர்ணத்தின் பேதாபேதத்தைக் காட்டுமென்பர் சிசுவைத்தியர். மஞ்சள் நிறத்ததாயும் அதிக தளர்ச்சியாயும் அதிக வறட்சியாயும் இல்லாத மலம் குழந்தையின் ஆரோக்கியத்தைக் குறிக்கும். பச்சை நிறத்ததாயும் அதிக தளர்ச்சி அல்லது வறட்சியாயும் துர்க்கந்தமாயும் உள்ள மலம் விசேஷமாய்ச் சிசுவின் வியாதியைக் குறிக்குமாகையால் அதற்கு உடனே பரிகாரஞ் செய்யவேண்டும். சிறுகுழந்தைகளின் ஆகார விஷயத்

திலேயே தாய்மார்கள் விசேஷ கவனஞ் செலுத்தவேண்டும். எனெனில், சிசுவயதில் மடியுங் குழந்தைகளுள் 100-க்கு 50 ஆகாரக் குற்றத்தினாலே யே மடிகின்றன.

(இன்னும் வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

அன்பு.

பல்பிணிகட் கிலக்காய்ப் பயனுறுதொழியும் இம் மானுடதேகம் நலமுறவிழையின் அன்பு என்னும் அரியபொருளின் ஆதரவைப் பெறுதல் ஆவசிகமாகும். நிரபராதியான ஓர் ஏழையைக் காணின் அவனது பரிதாப நிலையை யோர்ந்து உணவளிக்க முந்துவதும் அதனால் சந்தோஷிக்கும் அவ்வறுமையாளனிலும் பன்மடங்கு நாமின்பமுறுவதும் அன்பேயாம். இது கல்வி, கேள்வி, சாதுசங்கச் சார்பு, நல்லொழுக்கம் முதலிய நற்செய்கைகளிலு முண்டாகும் ஓர் சம்பத்து. திரிலோகங்களிலும் அன்பின் மிக்கதோர் செல்வமில்லையென்பது தோன்றக் கம்பர்காட்டிகளும்:—

" முன்புபின்பின்றி மூவுலகத்தினும்
அன்பினல்லதோ ராக்கமுண்டாகுமோ ?

எனக் கூறியுள்ளார். ஆகையின் அன்பில்லாதவன் செல்வமில்லாதவன் என்பதாகும். நிஷ்காரணமாகப் பிறர்க்குத் தீங்குசெய்தலையும் அதனால் அவர்கள் வருந்துங்காலத்து இன்புறுவோர்களையும் நாம் நேரிற் காண்கிறோம். அவர்கள் கரசரணாதிகள் பெற்றுள்ள மிருகங்களே யன்றி மானிடராகார். என்பது கண்டே நாயனரும்:—

" என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம் "

என்பு அமையப்பெறுத புழுவை வெய்யில் சுட்டெரிப்பதுபோல் அறக்கடவுள் (தரும தேவதை) அன்பில்லாதவரைக் கோபித்துத் தண்டிக்கும் எனக் கூறியதுமன்றி ' அன்பிலவனை ' அல்லது ' அன்பிலவரை ' என்னாது ' அன்பிலதனை ' எனக்கூறியது அன்பிலாளரை உயர்திணைப் பொருளாக மதிக்க மனமின்றிக் கேவலம் அஃறிணைப் பொருளேயென இழிவு படுத்திக் கூறியதாகும். அன்பானது முதலில் தன் சுயநலத்தையே நாடிநின்று பின்னர் மனைவி மக்கள் முதலிய தொடர்புடைய

ரிடத்தும் பரவுவதாகும். சகல ஜீவர்களையும் நம்போற்பாவித்து அவர்களிடத்து வாஞ்சை யுண்டாகுங்கால் அதற்கு அருளென்று கூறப்படும். அதுகொண்டே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் " அருளென்னுமன் பீன் குழவி " (அன்பென்னுந் தாய்பெற்ற அருளென்னுங் குழந்தை) என்று கூறுகின்றனர். பெரியோரிடத்தில் வைக்கும் அன்பிற்கு ' பக்தி ' யென்றும், மனைவியிடத்து ' மோகம் ' என்றும், தாழ்ந்தோரிடத்து ' கருணை ' என்றும், குழவியினிடத்து ' காதல் ' என்றும் பெயர் பெறும். இதையே அறிஞர் " இறவாத வின்பவன்புவேண்டி " என்றும் " சுற்றிலாப் பதங்கள் யாவையுங் கடந்த வின்பமே யென்னுடையன்பே " எனவும் வாயாரத் துதிசெய்துள்ளார். ஆகையால் நம்மனுபவத்திலும் அன்பே இன்பமென்றும், வன்பே துன்பமென்றும் அறிகிறோம்.

இத்தகைய பெரும் பொருளா மன்பு தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மூவகைப்படும். தலையன்பாவது தன்னை முற்றும் மறந்து பிறரைத் தன்னிலு மேலாகக் கொள்வது. கண்ணப்ப நாயனார் காளத்தியப்பரைக் கண்டபோது தம்மை மறந்து அவர் வயமாகி நின்ற நிலையே தலையன்பெனப்படும். இவ்வன்புருடைய தேகமுழுவதும் அன்புருவமேயன்றிச் சப்தாதுக்களா லாகிய சாதாரண தேகமாகக் கொள்ளுதல்கூடாது. கண்ணப்பன் வேறு, அன்பு வேறு என்று கருதுவதுகூடாது. கண்ணப்பன் அன்பினுருவமேயன்றி வேறல்லவெனும் பரம ரகசியத்தை வெளிப்படுத்தவேண்டியே " கண்ணப்பனெக்குமோரன்பன் " எனக் கூறுது ஸ்ரீ மணிவாசகப் பிரபுவும் தம் மருமைத் திருவாசகத்தில் " கண்ணப்பனெப்பதோரன்பு " என வியக்கின்றனர். அத்தகைய அன்புடையார் இக்காலத்துக் காண்பதரிதே. பூர்வம் சூரபத்மன் குமாரவேளின் வேலாயுதத்தால் உயிர்துறந்தகாலத்து அதைக்கேள்வியுற்ற அவன் மனைவியாகிய பதுமகோமளை அச்சொற்காற்றது உடன் மாண்டா ளென்பதை வியந்தே புராணிகர்:—

" காவன்மன்னவனிறந்தன னெனுமுரைகன்னத்துண்
மேவுமெல்லியிலசனியே றுண்டவெம்பணியேபோல்
தேவியாகியபதுமகோ மளையெனுந்திருமங்கை
யாவிநீங்கினடலையளி யாகியதுவன்றே "

எனக் கூறியிருக்கிறார். தலையன்புடைய ஸ்திரீ புமான்கள் உடலிரண்டும் உயிரொன்றுமாக விருக்கவேண்டுமெனுங் கருத்துக்கொண்டே சக்கீரவர்த்தித் திருமகளும் ஜானகியும் தலையன்புடையா ரென்பது தோன்

றக் கம்பநாட்டடிகளும் "ஒருங்கிய விரண்டுடற் குயிரொன்றுயினர்" என வியந்துள்ளார். இத்தகைய தலையன்பானது அன்புக்குரிய பொருளைக் கண்டபோதும் காணுதபோதும் உயிர் நிலையாய் நிற்பதாகிய பெருஞ் செல்வமாம்.

இடையன்பு என்பது அன்புக்குரிய பொருளை நேரிற்காணும் போது மாத்திரம் சுரப்பதொன்றாகும். அனலின்முன் அரக்காவது மெழு காவது படும்போது உருகுதல்போல் நேரிற் காணும்போதுமாத்திரம் மன முருகிப் பரவசமடைதலே இடையன்பாகும். அன்புக்குரிய பொருள் தன்னைவிட்டு நீங்கியகாலத்து இவ்வன்பு சுருங்கும்.

கடையன்பு என்பது இரண்டு கட்டைகளை ஒன்றோடொன்று நெடுநேரம் தேய்க்குங் கால் உண்டாகும் நீப்பொறிபோல் அன்பனும் அன்புக்குரிய பொருளும் நேரில் நெடுங்காலம் பழகிய பின்னர்த் தோன் றும் அன்பாகும். இதுவும் ஒன்றையொன்று பிரியுங் காலத்துப் பையப் பைய மறைவதாகும்.

மேற்கூறியவைகளில் ஒன்றேனும் அமையப்பெறு மானிடர் இருப்பதும் இறப்பதும் ஒன்றேயாகும்.

ஏனையோரிடத்துள்ள அன்பைக் காட்டிலும் இளங் குழவிக ளிடத்து எவருக்கும் அன்புண்டாதல் இன்றியமையாததாகும். சேயிலாச் செல்வம் பயன்படாததென்றே வள்ளுவனாரும்

> " பொறையிலாவறிவுபோகப் புணர்விலாவிளமைமேவத்
> துறையிலாவனசவாவி துகிலிலாக்கோலத்தூய்மை
> நறையிலாமாலைகல்வி நலமிலாப்புலமைநன்னர்ச்
> சிறையிலாநகரம்போலுஞ் சேயிலாச்செல்வமன்றே. "

எனக் கூறியுள்ளாராகையின் மக்கட்பேறு இன்றியமையாத தென்பதும்,

> " மக்கண்மெய்தீண்ட லுடற்கின்பமற்றவர்
> சொற்கேட்ட லின்பஞ்செவிக்கு "

என்றமையான் அவர்கண்மீது அன்புகொண்டிருத்தலே மனிதர்களின் முக்கிய கடமையென்பதும் பெறப்படும். அக் குழவிகளின் மீது அன்பு செலுத்தி நாம் ஆதரிப்பதுபோல் நீண்டகாலம் தவம் செய்து தமிழ்ப் பயிரை வளர்க்கவேண்டிப் பெற்ற அருமைக் குழந்தையாகிய நம் ' கலை மகள் ' என்னுஞ் செல்விமீதும் அன்பு பாராட்டி அச் செல்வச் சிறுமகள் நம் மடிமீதுங் காமீதும் ஆர்வமோடு வீழ்ந்து கூறும் மதலைமொழிக

ளைச் செவியாரக் கேட்டு ஆனந்திக்கும் பெரும்பாக்கியம் பெறுவோமா யின் இம்மையில் நாம் பெறும்பேறு வேறுண்டோ ? குமரவேளேயென நம்மனோர் துதிக்குமாறு அவதாரஞ் செய்து அடியேங்களின் மன விருளை நீக்கிய ஸ்ரீமத் ஞானியார்மடாலய சுவாமிகளின் அருணோக்கத் தால் நம் செல்வி எவ்வித பிணிகட்குமிலக்காகாது, பூரண சந்திரனைப் போற் பிரகாசிப்பாளெனினும் நம்மனோர் காட்டும் அன்பின் மிகுதியினா லேயே அங்கம் பூரிக்கப்பெற்று அழகுபெற உலாவித் தமிழ்ப் பயிரை வளர்த்து நம்போலியர்கட்கின்பமளிப்பா ளென்பதற் கெட்டுணையு மையமின்று. ஆகையின் அமிழ்தினுமினிய தமிழ் மொழிச் செல்வர்காள்! உங்களின் வாணாளை வீணாளாக்காது நங் கலைமகண்மீது அன்பு காட்டி ஆதரிக்க முந்துங்கள். இது எனது வெறும் வார்த்தையாகாது வேத மொழியாகு மென்பதை அனுபவத்திற் காணலாம். நமது கலைமகளும் ஆசிரியரும் நீடுழி வாழ்க. சுபம்!

தி. வடிவேலு முதலியார்

காரியதரிசி, கம்பர்கலாமிர்த சங்கம்

திருவெண்ணெய்நல்லூர்.

ஓர் நீதிவாக்கியம்.

" ஒதாதார்க்கில்லை யுணர்வொடு மொழுக்கமும் " எனக் கலைமக ளாரம்சத்தினரான ஔவையா ரருளிச்செய்த நீதிவாக்கியத்தின் கருத் தைச் சிறிதாராய்வாம். இவ்வாக்கியத்திற்குப் பொருளாவது ஒதாதவர்க்கு அறிவுடனே ஒழுக்கமுமில்லை யென்பதாம். எனவே ஒதுதல் பயனுக அறிவு மொழுக்கமு முண்டாமெனச் சித்திக்கும். அங்ஙனமாகவே ஒதுத லாவதென்ன? எதை யோதுவது? என்பவை யீண்டு விசாரிக்கத்தக்க வை. ஒதுதலென்னுந் தொழிற்பெயர் வாசித்தல் கற்றல் போன்றுள்ள பொருளைத்தரும். மிக வருமையாகக் கிடைக்கப்பெற்ற மக்கட் பிறப் பிற் கவசியம் வேண்டற்பாலது கல்வி. " அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும் புறங்கடை நல்லிசையு நாட்டும் " என்ற பாசுரத்தின்படி கல்வி புருஷார்த்தங்களைத் தரவல்லது. " கேடில்விழுச் செல்வங் கல்வி யொரு வற்கு மாடல்ல மற்றையவை " என்ற செந்நாப்போதாரின் வாக்குஞ்

செவ்விதாயுணர்த்தும். ஆகவே மக்கட் பிறப்பினர் யாரும் கல்வி கற்க வேண்டுவ தவசியம். கல்வி கற்பதற்குரிய நூல்கள் கருவி நூலென்றும் ஞான நூலென்று மிருவகையாம். கருவிநூல் இலௌகிக ஞானத்தைத் தருவது. ஞான நூலோ உண்மை யறிவை யுண்டாக்கும். மேற்சொன்ன ஒதுதலென்னுஞ் சொல் பொதுவாகக் கல்வியைத் தழுவிநின்றாலும் ஈண்டு ஞான நூலையே சிறப்பாகத் தழுவிநிற்கிறது. ஞான நூல் காரண மாகத்தா னுண்மை யறிய சாத்தியமாம். முன்னுள்ள பெரியோரும் ஒதுதலென்ற சொல்லை வேத முதலிய ஞான நூலைப் படித்தற்குப் பிர யோகித்துள்ளார். அங்ஙனமே நம் மூதாட்டியாராம் ஔவையாரும் ஈண்டுக் கற்றல் வாசித்தல் முதலிய சொற்களைப் பிரயோகிக்காது ஒதுதலென்ற சொல்லைப் பிரயோகித்திருக்கிறார். இதனாலோதுத லின்னதென்றும் ஓதப்படுவ தின்னதென்றும் வெளியாம். அங்ஙனம் ஓதுவது பயனை வுணர்வும் ஒழுக்கமு முண்டாமென்றார். உணர்வாவதறிவு. அவ்வறிவு இயற்கை செயற்கையென விருவகை. இவையுள் செயற்கை யறிவே சிறப்புடைத்து. கலைஞானம் சிவஞான மென்பன செயற்கை யறிவி னுட் பிரிவுகள். கலைஞான மட்டிருந்தால் செயற்கை யறிவு விசேடிக் காது. சிவஞானமுங் கலைஞானமன்றித் தலைப்படாது. எனினுஞ் சிவ ஞானந்தா னுண்மை யறிவாம். " எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற நாயனார் வாக்கானே உண்மை யறிவின் விசேட மறியலாம். அவ்வுண்மை யறிவுண்டாம் போதுதான் செயற்கை யறிவு சிறக்கும். இவ்வறிவின் பயனை வொ ழுக்க முண்டாம். ஒழுக்கமாவது தங்கடங்கள் வருணச்சிரமங்கட்குச் சொல்லப்பட்ட ஆசாரத்தை (நல்நடக்கையை) புடையவரா யிருக்கை. " ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க முயிரினு மோம்பப்படும் " என்ற நாயனார் வாக்கிங்குக் கவனிக்கத்தக்கது. மேற்கூறிப்போந்தவையால் மக்கட் பிறப்பினர் யாரு மோதுத லவசியமென்றும், ஓதப்படுவது ஞான நூலையே முக்கியமாகக் குறிக்கிறதென்றும், அது பயனை வுண்மை யறி வுண்டாமென்றும், அவ்வறிவு பயனை வொழுக்க முண்டாமென்றும் விளங்குவதாம். இதனானன்றே, " ஒதாதார்க்கில்லை யுணர்வொடு மொ ழுக்கமும் " என் றெதிர்மறை முகத்தா லருளிச்செய்தார் அரும்பெருங் கிழவியாராம் ஔவையார்.

N. சொக்கலிங்க செட்டியார்

பரங்கிப்பேட்டை.

இலக்கியப் பகுதி.

மணிமேகலை.

ஆபுத்திரன் நிறமறிவித்த காதை.

(அறவணர் மணிமேகலைக்கு ஆபுத்திரன் நிறங் கூறிய பாட்டு.)

(தொடர்ச்சி.)

40 - 48 அடர்க்குறு மாக்களொ டந்தண ரெல்லாங்
கடத்திடை யாவொடு கையகப் படுத்தி
யாகொண் டிந்த வாரிடைக் கழிய
நீசமக னல்லாய் நிகழ்ந்ததை யுரையாய்
புலைச்சிறு மகனே போக்கப் படுதியென்
றலைக்கோ லதனு லறைந்தனர் கேட்ப
வாட்டிநின் றலைக்கு மந்தண வவாத்தியைக்
கோட்டினிற் குத்திக் குடர்புய்த் தறுத்துக்
காட்டிடை நல்லா கதழ்ந்துகிளர்ந் தோட

இ - ள். ஆபுத்திரன் செல்லவே, பசுவைக் காணுமல் அறிவில்லாத வர்களோடு அந்தணர் பலரும் அதனைத் தேடிச் சென்று, வழியில் பசுவை யும் அதனைக் கவர்ந்து செல்லும் அச்சிறுவனையும் அகப்படுத்திக்கொண்டு, அவன் கருத்தை யறியாராய், " பசுவைக் கவர்ந்துகொண்டு இவ்வரிய வழியிற் செல்ல நீ நீசமகனல்லவே, ஏ புலையா! நீ சாதியினின்றும் விலக்கப்படுவாய், உற்றது சொல் " எனக்கேட்டு, வருத்துகின்ற கோலி னல் அவனை யடித்து ஒறுக்கத் தொடங்கினர். அப்பொழுது பசுவானது ஆபுத்திரனை மிகவும் வருத்துகின்ற உபாத்தியாயனை முட்டிக் கொம்பி னற் குத்திக் குடரைப் பிடுங்கி யெறிந்து காட்டில் விரைந் தெழுந் தோடி விட்டது.

49 - 56 ஆபுத் திரன்ரு னுங்கவர்க் குரைப்போ
னேவன செய்யன்மி னெடிவன கேண்மின்
விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பா
லறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டு
மிதனெடு வந்த செற்ற மென்னை
முதுமறை யந்தணீர் முன்னிய தரைமோ

இ - ள். ஆபுத்திரன் அவர்களை நோக்கிச் சொல்வான் : " என்னை வருத்தாதீர்கள் ; நான் சொல்வனவற்றைக் கேளுங்கள் ; மேய்தற்கென்று அரசனுல் விடப்பட்ட நிலத்தினிடத்தே தானே யுண்டாகிய புல்லை மேய்ந்து, நெடிய வுலகத்திலுள்ள மக்களனைவர்க்கும் பிறந்தநாள் தொடங்கி இனிமைசிறந்த தன்பாலே அறந்தரு நெஞ்சோடு அருள்சுரந் தூட்டுகின்ற இப் பசுவினிடத்து உங்கட்கு வந்த கோபமென்னை ? பழமையான வேதங்களையுணர்ந்த அந்தணர்களே, நீங்கள் எண்ணியதைச் சொல்லுங்கள் " என்று கேட்க,

57 - 69 பொன்னணி நேமி வலங்கொள்சக் கரக்கை
மன்னுயிர் முதல்வன் மகனெமக் கருளிய
வருமறை நன்னூ லறியா திகழ்ந்தனை
தெருமரு ளுள்ளத்துச் சிறியை நீயவ்
வாமக னுதற் கொத்தனை யறியா
நீமக னல்லாய் கேளெனை விகழ்தலு
மான்மக னசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்று
நரிமக னல்லனெ கேச கம்பள
னீங்கிவர் நுங்குலத் திருடி கணங்களென்
றேங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலு முண்டா
லாவொடு வந்த வழிகுல முண்டோ
நான்மறை மாக்கா னன்னூ லகத்தென

இ - ள். ஆவ்வந்தணர் ஆபுத்திரனை நோக்கி, " அழகிய வட்டமும் வெற்றியும் பொருந்திய சக்கராயுதத்தையுடைய திருமால் மகன் பிரமன் எமக்களித்த அரியவேதவிதியை யறியாது வேள்வியையிகழ்ந்து கூறினை ; மனச் சுழற்சி பொருந்திய சிறுமையை யுடையாயாதலின், நீ அப் பசு மகனென்பதற்குப் பொருத்த முடையை ; அறியாமையையுடைய நீ மகனல்லன் கேள் " என்று இகழ்ந்து கூறுதலும், ஆபுத்திரன் கூறுவான் : " நான்கு வேதங்களையும் அறிந்தவர்களே, அசலன் என்பவன் பசுவின் மகனன்றே ? சிருங்கியென்பவன் மானின் மகனன்றே? விரிஞ்சியென்பவன் புலியின் மகனன்றே ? மேலோர்போற்றும் கேச கம்பளனென்பவன் நரியின் மகனன்றே ? நுங்கிவர்களனைவரும் உமது குலத்து இருடிகணங்களென்று மிகவும் உயர்ந்த பெருஞ் சிறப்புக் கூறுதலு முண்டே, சாத்திரங்களில் பசுவால்வந்த அழிகுலமுண்டோ " என்று கேட்டனன்.

70 - 91 ஆங்கவர் சம்மூலோ ரந்தண ஹுரைக்கு
மீங்கிவன் றன்பிறப் பியானறி குவனென
நடவை வருத்தமொடு நல்கூர் மேனியள்
வடமொழி யாட்டி மறைமுறை யெய்திக்
குமரி பாதங் கொள்கையின் வணங்கித்
தமரிற் றீர்ந்த சாலியென் போடனை
யாது நின்னூ ரீங்கென் வரவென
மாமறை யாட்டி வருதிற முரைக்கும்
வார ணசியோர் மாமறை மு தல்வ
ஞரண வுவாத்தி யரும்பெறன் மனைவியான்
பார்ப்பார்க் கொவ்வாப் பண்பி னெழுகிக்
காப்புக்கடை கழிந்து கணவனை யிழந்தே
னெறிபய முடைமையி னிரியன்மாக் களொடு
தெற்கட் குமரி யாடிய வருவேன்
பொற்றேர்ச் செழியன் கொற்கையம் பேரூர்க்
காவதங் கடந்து கோவல ரிருக்கையி
னீன்ற குழவிக் கிரங்கே னுகித்
தோன்றுத் தூடவையி னிட்டனன் போந்தேன்
செல்கதி யுண்டோ தீவினை யேற்கென்
றல்லலுற் றழுத வவண்மக னீங்கிவன்
சொல்லுத றேற்றேன் சொற்பய மின்மையிற்
புல்லலோம் பன்மின் புலைமக னிவனென

இ - ள். அப்போது, இவன் பிறப்பின் வரலாற்றை யானறிகுவ னென்று ஓர்ந்தணன் உரைப்பான் : முன்னொரு நாள் வேதவிதிப்படியே கன்னியாகுமரிக்குச் சென்று நீராடி ஆங்குள்ள குமரித் தெய்வப்படி மத்தை மரபின் வணங்கி, தமரினின்று நீங்கித் தனித்து வழி நடந்த வருத் தத்தோடு இளைத்த வடம்பை யுடையாளாய் வந்த சாலியென்னும் பார்ப் பனியைக் கண்டு, " நின் ஊர்யாது ? எதற்காக இங்கே வந்தனை ? " என்று நான் கேட்டதற்கு, அப் பார்ப்பனி தான் வந்த வரலாற்றைச் சொல் லுவாள் : " யான் வாரணசி யென்னு மூரிலுள்ள ஆரண உவாத்தியாகிய அந்தணன் மனைவி; பர்ப்பார்க்கு ஒவ்வாத தியொழுக்கத்தில் நடந்து பெண் கட்குரிய காவலின் எல்லையைக் கடந்து கணவனைப் பிரிந்து வழிப்பய முடைமையின் கெடுதலுற்றமாக்களோடு கூடித் தென் குமரியில் நீராடும் பொருட்டுச் செல்லுகையில், பொன்மயமான தேரையுடைய பாண்டிய னது ராஜதானியாகிய கொற்கை நகரத்தைக் கப்பால் காதவழித் தூரம்

கடந்து ஆங்குள்ள ஓரிடைச்சேரியில் ஆண் குழந்தையொன்றைப் பெற்று, இக்கயின்றி யதனை ஓர் தோட்டத்திலிட்டுச் சென்றேன்; இப்படிப் பட்ட நீவினையை யுடையேனுகிய எனக்கு கற்கதியுண்டோ" என்று மிகத் துன்புற் றழுதனன்; அங்ஙன மழுதவன் பெற்ற அந்த யகனே யிவன்; இதைச் சொல்லுதலால் யாது பயனென்று இதுகாறும் உங்களுக்குத் தெரிவியாதிருந்தேன்; இவன் அசுத்தனுதலால் இவனைத் தொடாதொழிமின் என்று சொல்லினன்.

92 - 103 ஆபுத் திரன்பின் பமர்நகை செய்து
மாமறை மாக்கள் வருகுலங் கேண்மோ
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுட் கணிகை காதலஞ் சிறுவ
ரருமறை முதல்வ ரந்தண ரிருவரும்
புரிநூன் மார்பீர் பொய்யுரை யாமோ
சாலிக் குண்டோ தவறென வுரைத்து
நான்மறை மாக்களே நகுவன னிற்ப
வோத லந்தணர்க் கொவ்வா னென்றே
தாதை பூதியுந் தன்மனை கடிதர
வாகவர் கள்வனென் றந்தண ருறைதருங்
கிராம மெங்கணுங் கடிஞையிற் கல்லிட

இ - ள். பின்னர் ஆபுத்திரன் அந்தணர்களே நோக்கிப் புன்னகை செய்து வேதியர்கள் வந்த குலத்தைக் கூறுவேன் கேளுங்கள்; முதல்வ ராகிய வசிஷ்டர் அகஸ்தியர் என்னும் அந்தண ரிருவரும், வேத முதல்வ ராகிய பிரமன் முன்னே காணப்பட்ட தேவ கணிகையாகிய திலோத் தமையின் புத்திரர்களன்றே? பூணூநூல் தரித்த மார்பை யுடையவர்களே, இது பொய்ம்மொழியன்றே; சாலிக்குக் குற்றங்கூற வந்தீர்களே என்று சொல்லி அவ்வேதியர்களைப் பரிகசித்து நின்றனன். அப்போது வளர்த்த தந்தையாகிய பூதி யென்பவனும், இவன் வேதமோதுகின்ற அந்தணர்க் குப் பொருந்தாத அசுத்த னென்று நினைத்து அவனைத் தன் மனையினின் றும் நீக்கிவிட, பசுவைத் திருடின கள்வனென் றிகழ்ந்து அந்தணர்க ளுடைய கிராமங்களி லெல்லாம் அவனுடைய பிச்சைப் பாத்திரத்தில் கல்லிடத் தொடங்கினர்கள்.

104 - 115 மிக்கசெல் வத்து வினக்கியோர் வாழுந்
தக்கன மதுரை தான்சென் றெய்திச்
சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்

தந்தின் முன்றி லம்பலப் பீடிகைத்
தங்கினன் வகிந்தத் தக்கணைப் பேரூ
ரையக் கடிஞை கையி னேந்தி
மையற வுறப்பின் மனைதொறு மறுகிக்
காணர் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி
யுண்டொழி மிச்சிலுண் டோடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளுங் காவலன்றனை.

இ - ள். அதனுல் வேறு புகலிடம் பெறுத ஆபுத்திரன், மிக்க செல்வத்தோடு விளங்குபவர் வாழுகின்ற தென் மதுரையிற் சென்று சேர்ந்து, ஆங்குள்ள சரஸ்வதி தேவியின் கோயிலாகிய கலைகியமத்தின் முன்னேயுள்ள அம்பலத்தையே (வெளியிடத்தையே) இருப்பிடமாகக் கொண்டு, கையிற் பிச்சைப் பாத்திரத்தை யேந்தி, அம் மதுரைமாநகரில் குற்றமற்ற சிறப்பினை யுடைய வீடுகள்தோறும் சென்று சென்று வாங்கிவந்த வுணவைக் குருடர், செவிடர், கால் முடமானவர், அகதிகள், பிணியால் வருந்துபவர்கள் யாவரும் வருக வென்று கூறி ஒருங்குண்ணச் செய்து, அவர்கள் உண்டொழிந்த மிகுதியையே தானுண்டு, பிச்சை யோட்டைத் தலையணையாக வைத்துக்கொண்டு இரவிற் கண்ணுறங்கிக் காலங்கழித்து வருவானுயினன்.

ஆபுத்திரன் நிறமறிவித்த காதை முற்றிற்று.

பத்திராதிபர்.

சாத்திரப் பகுதி.

மங்கலம்.

(தொடர்ச்சி.)

விடயப்பற்றுகள் மாத்திரமோ மனத்தின் வயத்தன? அன்று, மற்றை உதிரிதியதங்களும் மனத்தினவேயாம், ஆகவே விரிவாய சகமனத்தும் மனத்தையாமன்றே. அற்றேல், மனமே சுகசாதன மாமா "லோவெனின்? மனமும் விவேகமுண்டாங்காற் சுனியம்போற் றோற்ற லின் மனம் சுகசாதனமாதல் யாண்டையதென்க. ஆகாதிருப்பினும்

நமக் கின்புண்டாம் நமக் கின்புண்டாம் என்றெண்ணி யெண்ணி யேங்கி இதுகாலம்வரை யந்தோ பரிதாபம் மோகமுற்றேம்.

இவ்விஷய சுகமோ மயக்கமாத்திரமே யாமெனக் கருதற் பால தேயாம். கானனீரதனு ஞானமதி மானினம் மிகு சேய்மையிற் கவரப் பெற்றதேபோன் மூட மதியராயயாம் அசத்தாய விடய வின்பத்தானே அஞருறுமாறீர்க்கப் பெற்றனம். யாமியாவரு மெவரானும் லிற்கப்படா விடினும் அத்தகையரேபோற் பரவயத்தராயும், அறிஞரென நாடியிருப் பினும் மூடராயும் உள்ளேம். இஃதநிர்வசனீயமாயையின் அற்புதமன் ரே! இவ்வுலகின் கண்ணே இறையேனும் விடய வின்புளதோ? ஓரி னின்றுமென்றுலும் யாம் வாளா அஞ்ஞானந்தகாரத்தாற் பந்தந் தொந் நித்தவரென மயலுற்றிருக்கின்றேம். விடய சுகலேசங்கள் அழிவுடைய தாதலானும், அளவிறந்த துன்ப விரையாயிருப்பதானும், துன்பமேயன்றி யின்பமென யாவர்தா னெண்ணுவர். படுகுழியின் கண்ணே மதியீன விலங்கினங்கள் வீழ்வதொப்பக் கனமான மாமோகத்தே யாம் வாளா வீழ்ந்துவிட்டேம், நெடுங்காலக் கழித்திம் மானுட யாக்கையைப் பெற் றுணர்வுற்ற பின்னேனும், யான் யார்? இச்நிருஷியம் எத்தகையது? இதற் கியாதுதான் வடிவம்? யாதின்பொருட் டீங்குற்றது? எனக் கிவ் வுலக முழுவதுமாளக்கிடைத்திடினும் மற்றெல்லாப் போகங்களும் போ கிப்பக் கிடைப்பினும் என்னே! இவைக ளியாவும் பொய்யா? அல்லது சிற்சிறிது மெய்யா? இவற்றைக் காணும் ஞானம் மெய்யா? இவை மெய் யா? இவற்றுள் யாது பொய்யோ அஃதே பொய்யாகுக அது மற்றொன் றுகவேண்டாம், பொய் பொய்யாயி னியார்க்கென்ன குறைவாம்? என இவ்வண்ணம் ஆராயின் நமக்குப் பேய்த்தேரின்கண்ணே தெறியுறவோ லுக்கு வைராகம் வருவதொப்ப விடயங்கள் யாவற்றின்கண்ணும் வை ராக்கியம் வந்துறுமென்ப தொருதலையே யன்றே.

(இன்னும் வரும்.)

வீர. சு.

நியாயமாலா.

(தொடர்ச்சி)

8. குணகூர நியாயம்: — குணம் – ஓர்வகைப் புழு, அகூரம் – எழுத்து, நியாயம் – நிருஷ்டாந்தம். இது அறிவிலா னொருவன் தான் விரும்பிய தொரு காரியஞ்செய்ய, அஃது அவனால் கருதப்படாத ஒரு நற்காரியமாய் முடிதலிதுபோல வென்கின்றது. அதாவது: குணம்

என்னும் புழுவானது தான் விரும்பிய தொன்றை நாடி வளர்ந்துசெல்ல அதனுல் மணலின்கண் தோன்றும் ரேகையானது அதனுல் கருதப்படாத ஒரு எழுத்தாய் முடிவதுபோல வென்பதாம்.

9. ஸ்தாலீபுலாக நியாயம்: — ஸ்தாலீ – ஒரு பாத்திர விசேஷம், புலாகம் – சோறு, நியாயம் – திருஷ்டாந்தம். இது ஒரு கண்பர் கூட்டத்தில் ஒருவன் குணத்தால் மற்றையர் குணத்தை யறிதலிதுபோல வென்கின்றது. அதாவது: பானைச்சோற்றில் ஒரு சோற்றின் பதம் அறியப்பட யாவும் பக்குவமாய்விட்டதை யறிதல்போல வென்பதாம்.

10. தூலே கனன நியாயம்: — தூலே–கம்பம், கனனம்–புதைத்தல், நியாயம் – திருஷ்டாந்தம். இது ஒரு அர்த்த நிச்சயத்தில் பல்வகை ஆசங்கைகளே யெழுப்பிச் சமாதானம் பெறுதலிதுபோல வென்கின்றது. அதாவது: ஒரு கம்பத்தை நாட்டுபவன் அது பலப்படுமாறு குத்திக் குத்தி நடுவதுபோல வென்பதாம்.

(இன்னும் வரும்.)

வா. மாசிலாமணி முதலியார்

டொன்ஷன் சப் இஞ்சனீர்

காஞ்சீபுரம்.

மநீஷா பஞ்சகம்.

பீடிகை.

பரங்கருணைத் தடங்கடலாகிய பரமசிவன், துக்கங்களென்னும் மகரங்களுக்கு இருப்பிடமாகிய சம்சாரமென்னுஞ் சமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கின்ற ஆன்மகோடிகளைக் கரையேற்றக் கருதினவராய், சண்டாள வேடம் புனைந்து, ஒரு சமயத்தில் காசிப் பட்டணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்ற சங்காசாரியர் சமீபத்துக்கு வந்தனர். வருதலும், சங்காசாரியார் அச்சண்டாள வேடச் சங்கரரைப் பார்த்து, " ஏ அதம சண்டாளா, இவனின்றும் விலகிப்போ விலகிப்போ " என்று கூவினர். அப்போது செயற்கைச் சண்டாளனை ஈச்சரன் இங்ஙனங் கூறுகின்றார்.

" ஓ உத்தம சந்யாசியே! இவ்விளுக்கட்குத் தகுந்த விடைகூறுக. அன்னவிகாரமான உனது சரீரத்தினின்றும் அன்னவிகாரமான எனது

சரீரத்தை விலகச்சொல்லுகின்றனையா? அல்லது சேதன ஸ்வரூபமான உனது பிரத்யகாத்மாவினின்றும் சேதன ஸ்வரூபமான எனது சரீரத்துள்ள பிரத்யகாத்மாவைத் தூரத்தே விலக்குதற்கு விரும்புகின்றனையா.''

இவ்விதம் பிரசினைசெய்து, சித்தாந்தத்தை வெளிப்படுத்து நிமித்தம், சங்கராசாரியருடைய உத்தரத்தைச் சங்கித்து நிராகரிக்கின்றார்.

'' முதலாவது பிரசினையை அங்கீகரிக்கும் பக்ஷத்தில் அது சரியன்று. ஏனெனின், உனது சரீரம் எவ்விதம் அன்னவிகாரமானதோ அவ்விதமே எனது சரீரமும் அன்னவிகாரமானது. உனது சரீரம் சுசியென்பையாயின் எனது சரீரமுஞ் சுசியாதல்வேண்டும். எனது சரீரம் அசுசியெனின், உனது சரீர மாத்திரஞ் சுசியாதலெங்ஙனம்? இங்ஙனம் இரு சரீரங்களும் ஒரேவிதமானபோது 'விலகிப்போ' என்று திரஸ்கரித்தல் எப்படிப் பொருந்தும்? ஆதலின் சரீரத்தைப்பற்றி விலகிப்போகச் சொல்லுதல் யுக்தமன்று. நம்மிரு சரீரங்களும் அசுத்தமென்பதற்கு வேதமே பிரமாணம்.''

இரண்டாவது பக்ஷத்தைச் சங்கித்துக்கொண்டு நிராகரிக்கின்றார்.

'' இனி ஆத்மாவைக் குறித்தேனும் அங்ஙனஞ் சொல்லுதல் சரியன்று. சைதன்ய ஸ்வரூபமான பிரத்யகாத்மாவோ உனது சரீரத்திலும் எனது சரீரத்திலும் மற்றப் பிபீலிகாதி சரீரங்களிலும் ஏக ரூபமாயுள்ளது. இங்ஙனம் எங்கும் நிறைந்துள்ள பிரத்யகாத்மாவிற்கு ஒரு பிரதேசத்தினின்றும் மற்றொரு பிரதேசத்திற்கு விலகிப்போகும்படியான கிரியை (தொழில்) உண்டாதலில்லை. ஆகவே கிரியா சூன்யமான வஸ்துவிற்குக் கிரியை யுண்டென்று சொல்லுதலெங்ஙனம் பொருந்தும்?

மேலும் அசத்து ஜடம் துக்கங்களாகிய அகங்காராதிகளிலும் விலக்ஷணமாகப் பிரகாசிப்பதும் அலேயற்ற சமுத்திரம்போல விகல்பரகிதமானதுமாகிய சத்ரூபமான பரப்ரம்மத்தினிடத்து, இவன் பிராமணன், இவன் சண்டாளன் என்னும் பேதமேது? கங்கையினிடத்தும் சண்டாளர் வீடு ஜலத்தினிடத்தும் பிரதிபலித்த சூரியனுக்கு எப்படிப் பேதமில்லையோ அப்படியே பிரத்யகாத்மாவிற்குப் பேதமில்லை. பொற்குடத்தினும் மட்குடத்தினும் நிறைந்துள்ள ஆகாயம் குணதோஷங்களைப் பற்றுததுபோல ஆத்மா குணதோஷங்களைப் பற்றுவதில்லை.

சரீரோபாதிகாரணமாகப் பின்னமாகத் தோற்றுகின்ற ஆத்மாவினிடத்து வாஸ்தவமாகப் பேதமேயில்லை. எவன் ஆத்மாவினிடத்துப் பேதங் கற்பிப்பானோ அவன் மிருத்யு ரூபமான சம்சாரத்தினின்றும் நீங்

காமல் எப்போதுந் துக்கர்தையே யடைகின்றன். இவ்விதம் சுருதிகள் முறையிடுகின்றன.

ஆதலின் எல்லாவற்றிலும் அகண்டாகாரரூபமாயிருப்பதும், தன்னிற்றானே பிரகாசிப்பதும், ஏகரூபமாயிருப்பதுமான பரப்பிரம்மத்தினிடத்துப் பேதங் கற்பிப்பதற்கு அவகாசமின்மையின், பிறநிந்தை எங்ஙனம் பொருந்தும்? சிறிதும் பொருந்தாதென்க."

இங்ஙனஞ் செப்பித் தெரித்தனர் சிவமூர்த்தி யென்க.

அவதாரிகை.

சண்டாள வேஷந் தரித்த பரமசிவன் வார்த்தையைக் கேட்டு, சர்வஜ்ஞரும் பூஜ்யருமாகிய சங்கராசாரியர், சர்வசாதன சமூகத்தால் வேதாந்த சாஸ்திரமப்பியசித்து நித்ய நிரதிசய பிரம்மானந்தானுசந்தானத்தால் உபசாந்த மனமுடையவராதலின், வர்ணாசிரமாதி அபிமானமில்லாதவாய் முமுக்ஷுக்கள் சிலரைப் பார்த்து அவர்கட்குச் சமாதியின்றியே வர்ணாசிரமாபிமான நிவர்த்தியின் பொருட்டும், நிஜஸ்வரூபமான ப்ரம்மைக்யபாவத்தை யடையும்பொருட்டும் "மநீஷா பஞ்சகம்" என ஐந்து சுலோகங்களிஞல் தமது ஸ்வாநுபவத்தை வெளிப்படுத்துகின்றார். அவ்விஷயத்திலும், ஜாக்ரதாதியவஸ்தா சாக்ஷியான பிரத்யகாத்மாவிற்குச் சுத்த சைதன்யத்தோடு ஐக்கியத்தையுங் காட்டுகின்றார்.

1-வது சுலோகம்.

ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்திஷ்வபுடராயாஸுவிதஜ்ரும்பதே
யாப்ரஹ்மாதிபிபீலிகாந்ததநுஷுப்ரோதாஜகத்ஸாக்ஷிணீ
ஸைவாஹம்நசத்ருஸ்யவஸ்த்விதிதிருடப்ரஜ்ஞாஹியஸ்யாஸ்திசேத்
சண்டாலோஸ்துஸதத்விஜோஸ்துகுருரித்யேஷாமநீஷாமம.

இ – ள். சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் மூன்றவஸ்தைகளிலும் எந்த ஞானமானது நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதோ, எந்த ஞானமானது ஜகத்துக்குச் சாக்ஷியாயிருக்கிறதோ, எந்த ஞானமானது பிரம்மா முதல் பிபீலிகை (எறும்பு) இறுதியாகவுள்ள சரீரங்களில் சேர்க்கப்பட்டுள்ளதோ, அந்த ஞான ஸ்வரூபனே நான்; காணப்படும்பொருள் நானல்லன் என்னும் திட ஞானம் எவனுக்குள்ளதோ அவன் சண்டாளனாயினும் அல்லது பிராம்மணனாயினும் அவனே எனது குரு. இது எனது அபிப்பிராயம்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.